**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,**

**Tindivanam.**

**CASE NO. STC. 336/2024**

**Prosecution witness – DW – 1**

| | | | |
|---|---|---|---|
| Date | 19.01.2026 | Calling | |
| Name | வள்ளி | Religion | |
| Father/Husband Name | காளிதாஸ் | Age | 43 |
| Village/City | வேப்பேரி | Caste. | |
| Taluka. | | | |

**Complainant present.**

**முதல் விசாரணை**

1. நான் சங்கரிடமிருந்து தொகை எதுவும் பெறவில்லை. ஹிஜாவு (HIJAU) என்ற ஒரு நிறுவனம் இருந்தது. இந்த நிறுவனத்தில் ஒரு லட்சம் போட்டால் மாதம் 15,000 என்று சொன்னார்கள். நான் ரகு மூலமாக ஹிஜாவு நிறுவனத்திற்கு வந்தேன். சங்கர் எனது தம்பி மூலமாக ஹிஜாபு நிறுவனத்திற்கு வந்தார். சங்கர் நேரடியாக என்னிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை எனது தம்பியிடம் தான் பணம் கொடுத்தார். நான் சென்னையில் தான் வசித்து வருகிறேன். ஊருக்கு வந்த பொழுது எனது தம்பி இடம் விற்பனை செய்வதற்காக சென்றபொழுது காத்தவராயன் மற்றும் சங்கர் பிடித்து வைத்துக்கொண்டு எனக்கு போன் செய்து தேவிடியா என் காச கொடு என்று சொன்னார். நான் ஒரு ஐந்து கிலோமீட்டர் தொலைவில் தான் இருந்தேன் அவர் போன் செய்த பிறகு நான் அந்த இடத்திற்கு சென்றேன்.

2. அப்பொழுது காத்தவராயன் மற்றும் சங்கர் ஒரு மூன்று அடியாட்களை அழைத்துக் கொண்டு வந்தார். அந்த அடியாட்கள் என்னை அடித்து மிரட்டி என்னிடமிருந்து காசோலையை வாங்கினார்கள். அப்பொழுது எனது தம்பி மனைவியும் நான் அங்கே வரவில்லை என்றால் நாங்கள் அனைவரும் இறந்து விடுவோம் என்று

என்னிடம் சொன்னதால்தான் நான் காசோலை எடுத்துக்கொண்டு போய் அவர்களிடம் கொடுத்தேன். காத்தவராயன் மற்றும் சங்கர் எனக்கு ஐந்து வருடங்களுக்கு முன்பாக நிலம் வாங்கி கொடுத்தார். அந்த நிலம் தற்போது வரை என்னுடைய பெயரில் தான் இருக்கிறது ஆனால் என்னால் அந்த நிலத்திற்கு செல்ல இயலவில்லை. ஹிஜாவு-ல் பணம் போட்டு நபர்களுக்கு 60% தொகையை நான் கொடுத்துவிட்டேன். காத்தவராயன் மற்றும் சங்கர் அடியாட்களை வைத்து மிரட்டி காசோலை வாங்கிய காரணத்தினால் தான் அவருக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. அந்த நிலத்தை எனக்கு வாங்கிக் கொடுத்ததற்கு ரூபாய் 5 லட்சம் லாபமாக காத்தவராயன் மற்றும் சங்கர் சம்பாதித்துள்ளார் ஆனால் தற்போது வரை என்னால் அந்த நிலத்திற்கு செல்ல முடியவில்லை.

**குறுக்கு விசாரணை - ஒத்தி வைக்கப்படுகிறது.**

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்